பதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

ஸ்தாபிதம் (1889)
[illegible]

THE HINDU ORGAN

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	ஆ 1-க்கு ரூ.	5-00
இலங்கை, இந்தியா:	" ரூ.	8-00
தொலேசாய்ப்பகுதி:	" ரூ	9.00
தனிப்பிரதி:		சதம் 5

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருகலம்		ரூ. 9-00
"	அரைக்கலம்	ரூ. 4-50
"	காற்கலம்	ரூ. 3-00

அடுத்த முறைகட்கு ஷெ விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—சஉ. } யாழ்ப்பாணம்;-பிரமோதூதஸு ஆடிமீ கஉ, (1930 ஜூலாய் 28) திங்கட்கிழமை. { இலக்கம்—அ.

உ

கணபதி துணை.

சேர்பூத்த கருவிறு அணர்ச்சி தேங்கச்
செம்பூத்த கமைக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சொனத்தத் தினிது துங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வநிவிச்சை தொழிலென்றேனு
மதம்பூத்தவிநாயகன்றள் வணங்கிவாழ்வாம்,

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழக தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.

ஸ்ரீ கதிர்காமம்
கதிரமலைத் தண்ணீர்ப்பந்தர்த் திருப்பணித் தர்ம இயலபு.

கதிரைமலை கடுமேலைவி அன்ன முத்து மாணிக்க விநாயகப் பெருமான் உத்தரவு பெற்று வருஷா வருஷம பக்தகோடி அடியார்கள் பொருளுதவியால் நடக்தேறிவரு கிற ஷெ தண்ணீர்ப்பந்தல் மேன்மேலும நடக்தோங்கி வருவதற்குப் பெரும் பொருள் வேண்டும.

கன தனவான்களாகிய சகல புண்ணிய சீலர்களும் தங்கள் தங்களால் இயன்றளவு உதவும பணம் அனுப்பும விபரம்:—

யாழ்ப்பாணம் நீவுப்பற்று மணியம் வேலணை ஸ்ரீ மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களிடம அனுப்பவும்.

முத்துமாணிக்க வேல்சாமி சிடனுகிய
சி. வீரவாகுப்பிள்ளை குமாரன்
வீ. ஆ. துரைசுவாமிப் பரதேசியார்,
கதிரமலை.
(Y. 66. 31-12-30.)

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

வங்கிக்காரர்

1918-ம்ஆ ஸ்தாபிதமானது — மூலநிதி 8 லட்சம் ரூபா..
இதுவரையிற் கொடுபட்ட பங்குப்பணம் ரூபா 1,64,706
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்தகாலமுடிவில் பங்கொன்றக்கு ரூ 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவிற்குக் குறையாமல் இருக்குமானுல் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாம்.

தவணைவரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்கப்படும். வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும், "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொலேசாய்ராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும் ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி, தானியங்கள், சில முதலாம் பழுதுபடாத பொருள்களையும் ஈடாகவைத்துக்கொண்டு தக்க பிணையுடன் கடன் எடுக்கலாம் (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.)

இன்னும் வேண்டிய விபரங்களை மானேசர் மூலமாக அறிந்துகொள்ளலாம்.
(Y. 72. 21-8-30.)

நோவினுல் வருந்துவோர்!

முதன் முதல் நினைப்பது எதாவது தைலத்தைப் பற்றியே அதாவது சீக்கிரத்தில் சுகங் கொடுக்கக் கூடிய தைலம். அதுதான்.

லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்.

ஆதித்தைலமும், இந்த நோவுகளை நிச்சயமாய்க் கண்டிக்கக் கூடியதும் இதுவே.

தலை வலி
நரம்பு வலி
கீல் வாய்வு
துடைப் பிடிப்பு
வாதம்
சுளுக்கு
முதலிய நோய்களுக்கும்

இதிற் கொஞ்சந் தடவை திரம்பிய சுகங் கிடைக்கும்.

(3—28) Little's Oriental Balm and Pharmaceutics Ltd., Madras

(Y. 51 31-12-30)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகன்னைமக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாசித், கஸ்தூரி, குமாஸ்தாகா, கீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாலை, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் நீர்ழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பரம் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைருத்தலுக்கு ரூபா க0. கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாசிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினுல் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவதான ஆரோக்கியசுகதாரவைத்தியசாலை
கரத்தான்குடி போஸ்து,
மட்டக்களப்பு,
இலோன்
Y.75. 31-12-30.)

The "New Lanka" Roadster Chromium Plated Bicycle.



இலங்கையில்
மிக
இலாபமான
பொருள்

முழுவதும்
பிரிட்டினில்
உண்டாயதென
உத்தரவாதம்.

இந்த "சைக்கிள்" மேற்பரப்பில் போடப்பட்டிருக்கும் தகடு தண்ணீரினுலாவது மழையினுலாவது கெட்டுப்போவதுமில்லை நிறம் மங்குவதுமில்லை.

விலை ரூபா 75-00 ரொக்கம்

அல்லது

முதல்முறை ரூ. 10-ம் பிற்பாடு மாதவீதம்
ரூ. 7-15 ஆக 10 மாசக் கட்டணம்.

SUB-AGENTS:-

M. A. Sinna Lebbe Bros., Batticaloa.	T N Lingam Vannarponnai, Jaffna	R M C. de Silva Main Street, Ambalangoda.
Jayanoris Silva & Sugathadasa, Trincomalee.	National Drapery Stores, Anuradhapura.	L N de Silva Matara.

SOLE AGENTS:
Colombo Stores, Ltd.
P. O. BOX 107. COLOMBO.

74. 19 6 30 to 18 1

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமோதூதஹு
ஆடிமீ ௧௨ திங்கட்கிழமை.



முருகன் திருவிழா.

"அருவமும் உருவுமாகி
  அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்றசோதிப்
  பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங்
  கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங்
  குதித்தனன் உலகமுய்ய"

ஈழநாடு எனப்படும் இந்த இலங்கையில் கலியுகவரதராகிய சுப்பிரமணியப் பெருமான் கோயில்கொண்டருளிய விசேஷ தலங்களாகிய கதிர்காமக்ஷேத்திரம் நல்லைக் கந்தசுவாமிகோயில் என்னும் இரண்டினிலும் எங்கள் முருகக்கடவுளுக்கு மகோற்சவம் நடைபெறுங் காலம் சமீபித்து விட்டது. இந்த மகோற்சவ காலத்தில் சண்முகத்தெய்வம் விசேஷ திருவருளை அன்பர்கட்கு வழங்கியருளுவாரென்ற நம்பிக்கையினால் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் இனிதுவாழும் குகனடியவர்களெல்லாரும் குறித்த இரு தலங்களையு மடைந்து பயபக்தியோடு சேவ்வேட்பெருமானைத்தரிசித்துவணங்கி அந்தஇறைவனது பூரண கிருபாகடாட்சத்தைப் பெறுதற்கு ஆவல் பூண்டுமுயற்சிசெய்பவராய்க்காணப்படுவர். க்ஷேத்திரத்திற்சென்றமுருகபிரானை நேரில் தரிசித்தற்குவாய்க்கப் பெறுதோராயுள்ளார் இம்மகோற்சவகாலத்தில் ஆசாரசீலராய் ஆங்காங்கிருந்து அப்பெருமானை மனத்திலே தியானித்துத் திருவருள் சித்திக்கப் பெறுவர் இன்னுஞ்சிலர் அறுமுகங்கொண்ட இறைவனை அவன் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரங்களிற் சென்று தரிசிக்கும் பாக்கியம் பெற்ற அடியார்கட்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்தலாகிய திருத்தொண்டைச் செய்து சண்முகமூர்த்தியின் பேரருள் கைகூடப்பெறுவர். சுருங்கச் சொல்லுகில் இந்த இலங்கையிலே வாழும் சைவநன்மக்களுள் விலக்கப்பட்ட சிலகருமங்களைச் செய்து பயின்றவர்களும் கந்தசுவாமிக் கடவுளின் மகோற்சவம் நிகழும் இம்மகாபுண்ணியகாலத்திலே அவ்வத் தீயசெயல்களை அறவேயொழித்துத் திரிகரணங்களினாலும் கலியுகவரதனை வணங்கி அருள்பெற்று ஈடேறுவர். இப்படி வருடம் முழுவதிலும் செய்துகொள்ளும் பாக்கியம் கிடைத்தாலோ வென்று மனம் ஏம்பலிக்கின்றது.

வேற்பெருமான் தலங்களிரண்டிற்கும் தரிசனத்தின் பொருட்டுச் செல்லும் அன்பர்களை ஏனைய அன்பர்களெல்லாரும் குகனடியாரெனப் போற்றிப் பூசித்து உபசரிக்கின்றார்கள். இதனை அந்தக் குகனடியார்களும் உள்ளபடியுணர்ந்து இத்திருவிழாக் காலத்திலேனும் அகமும் புறமுந்தூயராய் நடத்தல்வேண்டும். கதிர்காமத்திற்குச் செல்லும் யாத்திரிகருட்பலர் தாம் எடுத்துக் கொண்ட கருமத்தின் பெருமையையும் தம் பெருமையையும் அறியாது கதிர்வேற் பெருமானுக்கும் அடியார்க்கும் வெறுப்பான சிற்சில கருமங்களை யாத்திரைகாலத்திற் செய்து இடர்ப்படுகின்றனர். அவர்கள் அவற்றையுணர்ந்து ஒதுக்கிவிடல்வேண்டும் திரிகரணசுத்தியோடு கதிர்காமவேலவனைத் தரிசித்தல்வேண்டும்.

இவ்வுற்சவகாலத்தில் நல்லூரெம்பெருமானைத் தரிசிக்கும்படி செல்லும் அடியவர்களும் திருக்கோவிலிற் செய்யத்தகாதனவாகிய குற்றங்களைத் தவிர்த்து நடந்துகொள்ளுதல் வேண்டும். மேலும் நல்லூர்த் திருக்கோவிலைப் பரிபாலிக்கும் அதிகாரப் பொறுப்பினைப் பூண்டவரும் அவ்வாலயத்திற் சண்முகப்பெருமானை வழிபடுதற்கு வரும் அடியார்க்குச் செய்யத்தக்க சௌகரியங்களையெல்லாம் செய்து வருகின்றாரென அநுபவத்தில் அறியக்கிடக்கின்றது. ஆதலின் இத்திருக்கோயிலுக்குச் செல்லும் அன்பர்கள் தீயன விலக்கி நல்லன செய்து நலமடைவார்களாக.

"இந்துசாதனமும் கந்தபுராணமும்".

[வண்ணை: வை. இ.]

(24-7-30 இந்துசாதனம் 5-ம் பத்தியின் தொடர்ச்சி.)

எமது கட்டுரையின் றொடர்பைக் கூறுமுன் 20-7-30ல் வெளிவந்த சோதிடபரிபாலினி சுமந்துவந்த "குறிப்புகள்" என்னுந் தலையங்கத்திற் பொதிந்த ஏமாற்றம் ஒன்றை அறிவாளிகட்கு எடுத்துக்காட்டி மேற் செல்வாம்.

இந்துசாதன ஆசிரியர் சோதிடபரிபாலினி காலந்தவறாது சுமந்துதிரியும் நிந்தையான விஷயங்களை எடுத்துக் காட்டுமுகத்தான் 17-7-30 இந்துசாதனத்தில் உலகம் பலவித மென்னும் இன்னுரைப்பத்தியிற் சில எடுத்துக்காட்டுகள் கூறியுள்ளார். இவற்றிற்குச் சமாதானம் கூறுவதாக எண்ணிப்போலும் ஐயர் "குறிப்புகள்" வரைந்துள்ளார். இக்குறிப்புகள் வாக்கியக்குறிப்புப் போல்வன. குறிப்புகள் முழுவதையும் இங்கே அனுவதிப்பின் பத்திரிகை இடங்கொடாததுபற்றி அவற்றில் உள்ள ஒரு வசனத்தை மாத்திரம் உதாரணமாக இங்கே தருகின்றோம்.

> "அது, இந்துசாதனம் அச்சிடப்படும் சைவப்பிரகாசயந்திரசாலையிற்றானே சுன்னாகப் பறையரின் சார்பாக வெளியிடப்படும் திராவிடன் பத்திரிகையின் சென்ற 4-ம் புத் 1-ம் இல. பிரசுரத்தில் (கோப்பாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மானேசர்) "ஸ்ரீ மு. சுவாமிநாதனவர்களுக்கும் அவர் போன்ற சைவரோன்பார்க்கும் தாழ்மையான விண்ணப்பம்" என்னும் தலையங்கத்துடனும் "உங்களைத் தீண்டாதான்" என்ற கைச்சாத்துடனும் வெளியிடப்பட்ட கடிதத்துக்கு மறுப்பாக சாவகச்சேரி ஸ்ரீ மு. சின்னத்தம்பி என்பவரால் எழுதப் பெற்றது.
>
> ஒரே பத்திரிகையிலாவது வெவ்வேறு பத்திரிகைகளிலாவது ஒருவரை யொருவர் விளித்து வரையும் கடிதங்கள் சம்பாஷணை போன்றவைகளாம், இவ்வித சம்பாஷணைகளில், அவற்றினடங்கிய சம்பவங்களும் நியாயங்களுமே பத்திரிகை வாசிப்போர் கவனிக்க வேண்டியனவாம். குறித்த கடிதங்களிற் காணப்படும் சொற் பிரயோகம் வசனப் பிரயோகம் முதலியன கடிதமெழுதுமிருபலார்க்கு மிடையிலுள்ள தாரதம்மியங்களையும் அவர்களின் குணதோஷங்களையும் மனப்போக்கையும் கல்வியறிவையும் பொறுத்தனவாகவிருக்கும். ஆதலின் அப் பிரயோகங்கள் கடிதம் எழுதுபவரினதும் எழுதப் படுபவரினதும் தகுதியை வாசகர்கள் கணித்தறியும் பொருட்டே அவரவரெழுதியவாறு பத்திரிகைகளிற் பிரசுரிக்கப்படுகின்றன"

என்று பரிபாலினியாசிரியர் பகர்கின்றார்.

திராவிடன், சுன்னாகத்திற் பறையருக்காக அவர்கள் செலவு கொடுக்க சைவப்பிரகாச யந்திரசாலையில் அச்சிடப் பட்டு வருகின்றது. இந்த உண்மை பாலினி கூறவேண்டியதில்லையே. திராவிடனில் 4-ம் பக்கத்தின் அடிப்புறத்தில் தெளிவாகப் பிரதி பிரசுரத்தோறும் அச்சில் வெளிவருகின்றதே இனி திராவிடன் தமது பத்திரிகையில் "தாழ்மையான விண்ணப்பம்" என்னும் தலையங்கத்துடனும் "உங்களைத் தீண்டாதான்" என்னும் கைச்சாத்துடனும் ஒரு வியாசம் பிரசுரித்திருக்கின்றது. இதற்கும் இந்துசாதனத்திற்கும் எவ்வித தொடர்பு உண்டு? இவ் வியாசத்திற்கு மறுப்பாக ஸ்ரீ மு சின்னத்தம்பி யென்பார் எழுதியதை சோதிடபரிபாலினி சுமந்து வந்தது. இக்கட்டுரையிலுள்ள அவையல் கிளவிகள் பொதிந்த அருவருப்பையும், பெண்களும் சிறுவரும் அறிவு குறைந்தவர்களும் படிப்பின் பெருஞ் சலனத்தை அவர்கள் மனதில் உண்டாக்கிவிடுவதான வசனங்களையும் சோதிடபரிபாலினி சுமந்து வருகிறதேயென்று சாதனவாசிரியர் வருந்தினார் இது பொருந்தாக் கூற்று இதற்குச் சமாதானம் கூறப் புகுந்த பாலினிச் சன்னிதானம் தட்டுக்கெட்டு மூட்டுப்பட்டு "மற்றொன்று விரித்தல்" "மயங்கவைத்தல்" என்னும் வழுக்களை (தெரிந்தோ தெரியாமையோ) கைக்கொண்டு நீண்ட வசன[illegible]ன்றைத் திட்டிவிட்டு, மேலும், ஒருவரை யொருவர் விளித்து எழுதுவது சம்பாஷணை போலாம், அதை எந்தப் பத்திராசிரியரும் மாற்றவும் கூடாதாம் தள்ளிவிடவும் கூடாதாம், தபால்மூலமாகவோ நேரிலோ, காகிதத்தில் ஒரு பக்கத்தில் மாத்திரம் மசியினால் எழுதியனுப்புவதெல்லாம் எவ்வித ஆட்சேபணையுமின்றிப் பிரசுரம் பண்ணவேண்டுமாம்! இது சென்னை அரசாட்சியார் இட்ட கட்டளைபோலும். பாலினிச் சன்னிதானம், ஆசிரிய கடமைகளையும் தத்துவங்களையும் தன்னறிவு ஆற்றலைக்கொண்டு அறிந்து எமக்கும் கற்பிக்கப் புகுகின்றார். இதுவும் கந்தபுராண அருவருப்பை அளந்தறிந்த ஆற்றலைக் கொண்டே அளக்கப்பட்டது போலும். சின்னக்கடையிலே மற்சகத்திக்கும் கூர்மகத்திக்குமிடையே நடந்த சம்பாஷணை யொன்றை நாம் எழுதி அனுப்புகின்றோம். அதையும் இவ்வாசிரியர் பெருமான் பிரசுரிப்பாராக. பிரசுரிப்பார்! பிரசுரிப்பார்! ஏனெனில் இருவருக்கிடையில் நடந்த சம்பாஷணை தானே! நியாயங்களைத்தானே கவனிக்க வேண்டியது! பாஷை எப்படியிருந்தாற்றான் என்ன! மற்றைப் பத்திரிகைகள் தள்ளிவிடும் வியாசங்களை யெல்லாம் தடையின்றிப் பிரசுரிக்கும் பாலினிக்கு என்ன கிர்ணயம் இருக்கின்றது.

அபிமானிகள் நாம் அநுவதித்திருக்கும் பாகத்திலிருந்து பாலினியின் பதர்ப்பேச்சை அறிந்து கொள்வாராக.

இனி கந்தபுராணம் அரங்கேற்றிய காலம் சகாப்தம் 700 என்பதாக அப்புராண நூலிலேயே ஒரு சாற்றுகவி கூறுகின்றது. ஆனால் கந்தபுராணம் அரங்கேற்றியஞான்று காப்புச் செய்யுளில் திகழ்+தசக்கரம்=திகடசக்கரம் எனப் புணர்த்திய (பாலினியும் இராமுப்பிள்ளையும் இச்சொல்லைப் பாவித்தற்கு அருவருப்புக் கொள்வரே!) தற்கு விதி வீரசோழியத்திற் காணப்பட்டது. முருகப் பெருமானே இவ்விலக்கண வேட்டைக் கொண்டுவந்து ஆட்சேபித்த புலவருக்குக் காட்டினர் எனபது வழக்கு; இந்த வீரசோழியம் சாகாப்தம் 1060 வரையில் உண்டாயதாகத் தொன்னூலாராய்ச்சியாளர் ஸ்தாபிக்கின்றனர். ஆனால் இம்முடிபு சாற்றுகவியின் கூற்றுக் கியையாமை நிகழ்கின்றது. ஆனால் அச்சாற்றுகவியின் அர்த்தம் கொள்வார் ஆயிரத்தின்மேல் 70 என்று அர்த்தம்பண்ணுவர் ஒருசாரார். பின்னொருசாரார் அச்சாற்றுகவி மாறுதலடைந்திருக்கவேண்டும் என்று கொள்கின்றனர். இஃதெவ்வாறாயினுமாகுக, கந்தபுராணம் அரங்கேற்றிய காலத்தில் பல்லவ அரசர்கட்கும் சோழ மன்னர்கட்கும் இடையிடையே காஞ்சிபுரத்தின் ஆதிபத்தியத்தைப் பற்றிக்கலகம் நிகழ்ந்துகொண்டேயிருந்ததென்பது வேறு சான்றுகளால் அறியக்கிடக்கின்றது. ஆகவே தம்முள் கலகமும் சண்டையும் ஒற்றுமையின்மையும் இருக்குங்காலத்தில் ஒரு அரசன் காமசிருங்காரம் அமைத்துப் பாடும்படியாகக் கச்சியப்பரைக் கேட்டாரா? இது யாம் முன் கூறியவற்றை வலியுறுத்துமாறு கூறப்பட்டதென்க. புராணம் அரங்கேற்றியது அனேக கிராமங்களிலுள்ள வேளாளர் செலவில் எனறல்லவா சொல்லப்பட்டிருக்கின்றது. இனி, புராணம் பாடும்பொழுது ஒவ்வொருநாளும் 100, 100 பாடல்கள் பாடி அத்திருவேட்டைக் குமாரகோட்டத் திறைவன் சந்நிதானத்தில் வைத்துத் திருக்காப்பிட்டுச் சிவாசாரியார் செல்வது வழக்கமென்றும், அடுத்தநாட் காலையில் அவ்வேட்டைப் பார்க்குந்தோறும் சிவாசாரியார் எழுதியவற்றிற் சில திருத்தப்பட்டு அவற்றிற்குப் பிரதியாக வேறு எழுதப்பட்டிருந்தனவென்றும் கூறப்பட்டிருக்கின்றதே இதைப் பாலினிச் சந்நிதானம் நம்ப வில்லையா! இதை நம்பாதுபோனால் ஏனைய சுருதிகளையும் அன்றோ இப்பார்ப்பனர் கைவிட வேண்டும். இவருக்கு விபூதிப் பூச்சேன்! உருத்திராக்கமேன்! யக்ஞோபவீதமேன்! குடுமியேன்! இவர் தம்பஞ்சாங்கத்தின் முன்னேட்டில் விக்கினேஸ்வரன் சிவபிரானார் முருகப்பெருமான் இவர்களின் திருவுருவப் படங்களைப் பதிப்பித்தல் யாரை ஏமாற்றுதற்கோ! பரிபாலினியின் ஆசிரிய குரைப்பத்தியின் தலையில் கஜலட்சுமியின் திருவுருவத்தைப் போடும்படியாகக் கூறியது இராமுப்பிள்ளையோ அல்லது சென்னை அரசாட்சியாரோ.

ஐயோ! ஆசிரியரின் கடமை யறியா மடமையினால் எம்முடைமையாம் கடமையை மாற்றவுந் துணிந்துவிட்டனரே.

(வரும்.)

தேவை!

"தமிழன்" காரியாலயத்திற்கு பத்துக் கொம்போஸிட்டர்களவரை தேவை. ஆங்கிலமுந் தமிழும் அறிந்தவர்களாயிருத்தல் வேண்டும். தாரதலப் பத்திரங்களோடு காகிதமூலமாய்க் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

"தமிழன்"
(Mis. 19 28 & 31) C/o இந்துசாதனம்.

விடப்பட்டன.

"மநுதர்ம சாஸ்திரம்" "ஆப்தர்வாக்கியங்கள்" என்பன இடமின்மையால் இம்முறை விடப்பட்டன.

பொலிஸ் காவல்.

யாழ்ப்பாணம் வடமராட்சிப்பகுதி துன்னாலை வடக்குத் தெற்குப் பாகங்களுக்கு அக்கிராமவாசிகளின் செலவில் ஒரு பொலிஸ்தான மமைக்கப்பட்டிருப்பதாக அரசாட்சிக் கஜற் பத்திரிகை கூறுகின்றது மூன்று மாதத்திற்கே இங்கு இந்தக் காவல் நடைபெறும்,

தாழ்ந்தவகுப்பார் பிரதிநிதி.

வரப்போகும் அரசாங்க சபையிலே தமது கஷ்ட கஷ்டங்களைக் கவனிப்பதற்காகத் தம்முள் ஒருவரைத் தமது பிர[illegible]நிதியாகத் தேசாதிபதி நியமனம் பண்ணவேண்டுமெனக் குடியேற்ற நாட்டு மகாமந்திரியாருக்கு யாழ்ப்பாணத்திலுள்ள தாழ்ந்தவகுப்பார் விண்ணப்பஞ் செய்திருக்கின்றனர். அங்கும் இங்குமாகப் பரவி ஏறக்குறைய 80000 பேர் தமது வகுப்பைச் சேர்ந்தவர்களிருக்கின்றனரென்று விண்ணப்பத்திற் குறிப்பிட்டிருக்கின்றனர்.

மாகாணத் "தகரத் தெய்வங்கள்."

யாழ்ப்பாணத்திலே ஒரு பகிரங்கக் கூட்டத்தில், கௌரவ ஸ்ரீ பத்மநாதன் பேசிய பொழுது, இலங்கையிலே நாம் அளவுக்கு மிச்சமாக அரசாட்சித் தலைவர்களை வைத்திருக்கின்றோம. இந்தியாவிலே இலங்கையளவு பருமனுள்ள ஒரு மாகாணத்திற்கே ஒரு தலைவர் இருக்கின்றார். உத்தியோகத்தரைக் குறைப்பதை நாம் அரசாட்சி மாகாணத்தலைவர்களிலிருந்தே தொடங்குவோம் ஒன்பது தலைவர்கட்குப் பதிலாக நாம ஆறு தலைவர்களை வைத்துக்கொள்ளலாம், துரதிஷ்டவசமாக மாகாணத்தலைவர்கள் தம்மை ஒவ்வொரு சிறுத்தெய்வங்களாகவே நினைத்துக் கொள்கின்றனர், என்றும் கூறியுள்ளார்.

இருபிரிவுகள் ஒன்றுக்கப் பட்டன.

யாழ்ப்பாணத்திலே வலிகாமம் வடக்கு என்றும் வலிகாமம் கிழக்கு என்றும் இரு மணியகாரர்களின் பார்வையிலிருந்த இப்பகுதிகள் இரண்டும்ஒன்று சேர்க்கப்பட்டு இப்போது ஒரு மணியகாரனின் பராமரிப்பில் விடப்பட்டிருக்கின்றது. இது விஷயமான அரசாட்சி விஞ்ஞாபனம 27-7-30ல் வெளிவந்த கஜற் பத்திரிகையில் உத்தியோகமுறையில் வெளியாக்கப் படுத்தப் பட்டிருக்கின்றது.

இவ்வாறாக மணியகாரன் பிரிவுகளை ஒன்று சேர்ப்பதிலும் பார்க்க மாகாணங்களை ஒன்று சேர்த்து அரசாட்சிக் காரியத்தலைவர்களைக் குறைத்து விடல் இன்னும் மேலான சிக்கனவாகவிருக்குமென்று நம்புகிறோம்.

சுதேசப்புகையிலைச் செய்கை.

மேற்குறித் தலையங்கத்துடன் 16-7-30 வெளிவந்த கொழும்பு 'டைம்ஸ், பத்திரிகை, ஆசிரியர் கூற்றாகக் கூறுமிடத்து யாழ்ப்பாணப் புகையிலைச் சுருட்டைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது:—

"புகையிலைச்செய்கையை முதன் முதலாக அதை உயர்ந்தசாதிப் புகையிலையாக்குவதற்கு இங்கே செய்கைபண்ணத் துணிந்தவர் 'இராஜவெல்லா'விலுள்ள மிஸ்டர் றபேட் டைற்லர் ஆகும். இச்செய்கையில் அவர் அதிக லாபம் பெற்றாரென்றெனிலும் தும்பறைப் புகையிலைச் சாதியைக்கொண்டுவந்தவரவரே யாவர். இந்தச்சாதிப் புகையிலை பிற்காலத்தில் தெவிதலைப்புகையிலையென வழங்கப்பட்டு, யாழ்ப்பாணச் சுருட்டுக் காப்பிலையாகப் பாவிக்கப்பட்டது. கொஞ்சக் காலமாக, கொண்டசேலாவென்னுமிடத்திலுள்ள மிஸ்டர் இங்கிஸ்ரன் என்பார் இந்தச்சாதிப் புகையிலையைக் கொண்டு தும்பறைச்சுருட்டு' என்னும் சுருட்டை உண்டாக்கி விற்பனைக்கு வைத்தனர். இந்தச் சுருட்டு அதிகம் பாவவில்லை. இருந்தாலும் யாழ்ப்பாணத்திலே காப்பிலை குல்லிய வண்ணம் சிகப்பு நூலினால் கட்டப்பட்டு ஆக்கப்பட்ட சுருட்டுக்களிலும் பார்க்க இந்தச்சுருட்டுக்கள் நாமமற்றனவாயிருந்தன. இங்கிலாந்திலே யாழ்ப்பாணச்சுருட்டைப் பொருட்காட்சியிற் கண்டும் அதன் புகையை முகர்ந்தும் அனுபவித்த ஒரு ஐரோப்பியர் இந்தப் புகை, தோட்டக்காரர்கள் தமது தோட்டத்துப் பூச்சிகளைத் துரத்துவதற்கு உபயோகிக்கவந்தது என்று கூறினார்."

விளம்பரம்.

கீழ்க்கண்ட விலாசத்தில் மங்களூர் கொழுக்கி ஓடுகள் (Mark Alvares & Co) பெருந்தொகையில் விற்பனவுக்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

இங்ஙனம்,
சி. குமாரசாமி,
வர்த்தகர்,
வல்வெட்டித்துறை.

(Mis 10 17, 21, 24, 28.)

ஸம்ஸ்கிருத வித்தியாசாலை விளம்பரம்.

"ஸ்ரீ கமலாம்பிகாஸமேத ஸ்ரீ கயிலாசநாதஸ்வாமி தேவஸ்தான, வேத, ஆகம ஜோதிஷ, காவ்ய, புராண, வித்தியாசாலை" என்னும், நாமத்தையுடைய வித்தியாசாலை யொன்று மேற்படி தேவஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டு நிகழும் பிரமோதூத ஆடி மீ க-ந் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. இலவசமாக அன்ன வஸ்திரம் பெற்றுக்கொண்டு சேர விரும்புவோர் இந்த மாதம் ௩௦-ந் திகதி வரையிலும் ஏனையோர் பின்னும் விண்ணப்பப் பத்திரம் அனுப்பலாம். அச்சிட்ட விண்ணப்பப் பத்திரங்கள் மேற்படி வித்தியாசாலை ஸ்தாபகர் பிரம்மஸ்ரீ ந. வே. கார்த்திகேயக்குருக்கள் (தம்பையர்க்குருக்கள்) அவர்களிடம் எழுத்துமூலமாய் அல்லது அவருடைய காரியாலயத்தில் முகாமுகமாய்ப் பெறற்பாலன.

☞ தெரிவுசெய்யப்பட்ட முதல் 12 மாணவர்களுமே இலவசப் போஷணையும் கல்வியும் பெறுவர்.

நல்லூர், 20-7-30.

(M. 1. 21st to 21 8-30)

கொலைக்குற்றம்.

இக்குற்றஞ்செய்தோர்தொகை 1929ம் வருடத்தில் 243 என்றும், 1928ல் 248 ஆகவிருந்ததெனவும் பொலிஸபகுதியார் அறிக்கையிடுகின்றனர்.

காலிதெரு.

கொழும்பிலிருந்து காலிக்குச்செல்லும் தெருவினை அகலிப்பதற்காக 5½ லட்ச ரூபா இந்த வரவு செலவுத் திட்டத்தில் சேர்த்திருக்கின்றனர்.

ஓர் தமிழ்மாதைக் கொல்ல எத்தனித்தல்.

புத்தளத்திலே ஸ்ரீ கவரத்தினம் என்பாரின் பத்தினியார் தனிமையாயிருக்குஞ்சமையத்தில, சென்ற ஒகடோபர்மீ 2உ இரவு, ஹெருமசிலோ அல்லது பொடி அப்புஹாமி, அல்லது கரோலிஸ் என்பான், வீட்டினுட்சென்று கத்தியை விரித்துக்காட்டிப் பயமுறுத்திப் பணம முதலியபொருள்கள் இருக்குமிடங்களைக் காட்டும்படியாகப் பலவந்தப்படுத்தியும், பின் துப்பாக்கியை அப்பெண்ணுக்கு நேரே நீட்டி இருமுறை விசையைத்தட்டியும் அத்துப்பாக்கி தொழிற்படாததையறிந்து அப்பெண்ணை ஊறுபடுத்தியும் குற்றஞ்செய்ததாக, கொழும்புச சுப்பிரீம் கோட்டில் விசாரணை செய்யப்பட்டு 14 வருடம் கடுங்காவல் விதிக்கப்பெற்றான். இவன் இதற்குமுன் நான்குமுறை குற்றஞ்செய்து தண்டனையடைந்தவனுமாம்.

இந்தியச் சட்டமஹாசபையின் அக்கிராசனர்.

படேல் அவர்கள் அரசினரின் முரட்டுத்தனத்திற் பிரியமீனப்பட்டுத் தமது அக்கிராசன பதவியை விட்டு நீங்கிவிட இப்போது அந்த இடத்திற்கு மினார் முகம்மது யாகுப் தெரிவுசெய்யப்பட்டார்.

காந்தி வரவேவேண்டும்.

லண்டனிற் கூடவிருக்கும் வட்டமேசைச் சமாசத்திற்கு காந்தியும், நேருவும அழைக்கப்படவேண்டுமென்றும, இராசப் பிரதிநிதி சகல இராசிய கைதிகளுக்கும விடுதலையளித்து பிரசித்தம பண்ணவேண்டு மென்றும, பாராளுமன்றத்துத் தொழிற கட்சியாரிற பலரின அபிப்பிராய மிருக்கின்றது.

சாரதாச் சட்டம்.

இக்கூட்டத்தின்படி இந்தியாவிலேசிறுபராயத்திலே விவாக முடித்தல் குற்றமாகும. இப்போதுஇச்சட்டத்தின்கீழ்முதன் முதல் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருமுஸ்லீமுக்கு நீதிபதிதண்டனை விதித்தனர். இதையறிந்தவுடன் பஞ்சாப் அரசாட்சியார் தந்திமூலமாக அக்குற்றத்தை மன்னித்துக் குற்றவாளியை விடுதலையாக்கிவிட்டனர். முஸ்லீம்மக்களைத் திருப்தியினப்படுத்துவது இச்சமையத்தில் இராசதந்திரத்தின் பாற்பட்டதாகாது.

பெசன்ற் அம்மையார்.

இந்த ஆங்கில அம்மையாராகும் இந்தியத் தொண்டர் தாம் இந்திய சனமகாசபையின் ஊழியச் சங்கத்திற் சேர்ந்துகொள்வதாக லண்டனிலிருந்து வல்லபை படேல் அவர்களுக்குத் தந்திச்செய்தியனுப்பியிருக்கின்றனர்.

லண்டன் பத்திரிகைகளின் அபிப்பிராயம்.

டெயிலிமெயில்—சைமன் அறிக்கை கழிவு கடுதாசிக் கூடையில் எறியப்படவேண்டிய தொன்றுகின்றது லோர்ட் ஈர்வின், இந்தியாவைச் சீக்கிரத்திலும் தவறுமலும் இழந்துவிடுவதான நிலைமைக்கே வழிக்கொள்கின்றனர். என்கிறது.

டெயிலி எக்ஸ்பிறஸ்—இச்சமையத்திலே மிக உறுதியாயுள்ளதும் நீதியாயுள்ளதுமான பரிபாலனம் அவசியமாகின்றது. என்கிறது

ஆந்திரச் சர்வகலாசாலை உபதலைவர் விலகினர்.

மேற்குறித்த பதவியை வகித்திருப்பவராகும் C. R. ரெட்டி அவர்கள் இப்போது இந்தியா இதாராச்சியங்களுடன் சமத்துவ உரிமை பெறுவதற்குப் பிரயத்தனப்படுவதையறிந்தும் அரசினர் அதை அளிக்காது அடக்குமுறையைக் கைப்பற்றுவது தமக்கு வெறுப்பைத் தருவதால், தான் சனமகாசபையின் மனுஷனாக இல்லாதிருந்தபோதிலும், அரசினரின் கீழ் எவ்வித உத்தியோக பதவியையும் வகிப்பதற்கு மனம் ஒருப்படவில்லையென்று இராசப் பிரதிநிதிக்கு எழுதியறிவித்து வேலையையும் விட்டு விலகினர்,

இந்திய இராசப் பிரதிநிதியின் பேருரை.

இந்த ஜூலைமீ 9உ இராசப்பிரதிநிதி சட்டமகாசபை மண்டபத்திற் பிரவேசித்தபொழுது, கதருடையணிந்த இந்தியப் பெண்கள் இருபதைந்துக்கு மேற்பட்ட தொகையினர், இராசப் பிரதிநிதி செல்லும் வழியில் மறித்து நின்றனர் என்றும், பொலீசர் இவர்களை விலகும்படி சொன்னபொழுது அவர்கள் அதற்கு மறுத்தனர் என்றும், இராசப் பிரதிநிதி உட்பிரவேசித்தவுடன் "சமாதானம் இல்லை", "கலகம் வாழ்க", "தேசத் துவசம் உயருக", "ஆங்கிலக் கொடி ஆழ்க", "பகாற்சிங்வாழ்க", "மகத்மா காந்திக்கு ஜே" என்ற இன்னோரன்ன கூற்றுக்களை உரத்துத் தொனித்துப் பின் இவைகளைக் கூறிக்கொண்டே நகருட் பிரவேசித்து பகிரங்கவீதிகள்தோறும் வலம் வந்தனரென்றுந் தெரிகின்றது. இராசப்பிரதிநிதி அவைக்களித்தபேருரையில் "இராசாதிகாரச் சுவய ஆட்சி இந்தியாவின் சுபாவமான இராசிய வளர்ச்சியாகும். இந்தப் பிரசித்தம் இன்னும் என்றும் ஸ்திரமானதே" என்றும், "இப்போதிருக்கும் சீர்கேடான நிலைமை இந்திய இராசிய நிலைமையைப்பற்றிய எனது எண்ணத்தை ஓர் மயிரளவேனும் மாற்றவில்லை" யென்றும், "வட்டமேசைச்சமாஜம் சைமன் அறிக்கையால் பிடிக்கப்படாது அகண்ட இலட்சியத்துடன்கூடி ஆலோசனை செய்யலா" மென்றும், "ஆங்கிலேயரும் இந்தியரும் கூடி அனைவராவி இந்தியாவுக் கேற்றதோர் ஆட்சியமைப்பைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் என்முடியாதகாரியமாகுமென்று எனக்குத் தோன்றவில்லை" என்றும் குறிப்பிட்டனர்.

லண்டனில் இந்திய வீடு

இவ்விடுதியை முதன்முதலாகத் திறந்து வைத்தவர் ஜோட்ஜ் மன்னராகும். இத்திறப்புவிழா நடத்திய காலையில் மன்னர் பின்வருமாறு கூறியுள்ளார்:—

இந்தப் பெரிய மாளிகையைத் திறந்து வைத்தற்காக நான் இங்கே வந்தமை எனக்குப் பெரிதும் சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. நானும் எனது பாரியாரும் இந்தியாவுக்குச் சென்றதான ஞாபகப்படுத்தக்கூடியசெல்லுகை நடந்து 25வருடங்களாகின்றன. அக்காலத்தில் இந்தியா எனது அன்பையும் அனுதாபத்தையும் இழந்துவிடவில்லை. அங்கு அநேக மாறுதல்களும், வியாகுலங் கொண்ட நாட்களும் நடந்துவிட்டன. ஆனால் அவைகளையெல்லாம் ஒருவாறு கடந்து இந்தியா உலகத்திலுள்ள பெருஞ் சாதியாருக்குள் ஒரு ஸ்திரமான நிலையையடைந்துவிட்டதென்பதை நினைக்க எனக்கு மிகவுஞ் சந்தோஷமாயிருக்கின்றது. அந்த முன்னேற்றத்திற்கு இந்த இந்திய விடுதிவீடு ஒரு பெரும் அறிகுறியாக ஒருவாறு இருக்கின்றது. இந்த அவலமான சந்தர்ப்பத்தில், இந்தியாவை நேசிக்கும் ஒவ்வொருவருடைய எண்ணமும் இந்தியாவின் எதிர்காலநிலையை ஒரு ஸ்திரமான அஸ்திவாரத்தில் நன்கு வைக்கவேண்டுமென்ற எண்ணும் இந்த வேளையில், இந்தியாவின் ஒரு காலசரித்திரத்தைக்குறிக்கும் இந்தவேளையில் இந்த மாளிகையின் திறப்புவிழா நடைபெற்றது ஒரு நற்சகுனமென்றே சொல்லலாம் ஆனால் இந்திய வீடு இதனிலும் பார்க்க இன்னும் மேலான நோக்கங்களைக் குறிப்பதொன்றாகும். நான் சுற்றிலும் பார்க்கும்பொழுது இந்தியாவின் மாகாணங்களின் அடையாளங்களும், மாகாணங்களின் குறியீடுகளும், சிற்றரசர்களின் சின்னங்களும் காணப்படுகின்றன. இவைகளனைத்தையும் கொண்ட ஒரு வீடு இந்தியாவின் ஒற்றுமையைக் குறிப்பதொன்றுகின்றது.

கடிதர்கட்கு விஞ்ஞாபனம்.

[கந்தபுராணமும் சோதிட பரிபாலினியும் என்னும் விஷயமாக எமக்கனுப்பப்படும் கடிதங்கள் எமக்குக் கிடைத்த ஒழுங்கின்படியே பிரசுரம் பெறுவனவாகுமென்பதை நிருபர்கட்குத் தெரிவிக்கின்றோம். பத்திராசிரியர்]

சோதிடபரிபாலினிப் பத்திராதிபரே சொல்வதைக்கேட் டெழுதிய மடமின்.

—:o:—

கனம் R. S. இராசாதையரே!

நீர் ஓர் பிராமணராயும் ஓர் பஞ்சாங்கத்தை வெளிப்படுத்துபவராயுமிருந்துகொண்டு சோதிட பரிபாலினி யென்னும் மருடநாமத்துடன் ஓர் பத்திரத்தையுந் தொடங்கி, எழுதுவதற்கு விஷயமின்மையினாலோ, அன்றேல், நம் கர்ம வசத்தினாலோ, இவ்வகையெல்லாம் மெச்சியுச்சிமேற்கொளும் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளப் பெற்ற கந்த புராணத்தை இகழத் தலைப்பட்டீர்! அந்தோ! தேசத்திலே இஷ்ட சித்திகளைக் கொடுக்கும் தெய்வீகமமைந்ததென மேற்கொள்ளப்பட்ட இப் புராணத்தை நீரிவ்வளவு கீழ்மைப்படுத்துவீராயின் சைவசமயத்தை வேரோடு அறுப்பதற்கு உம்மிலும் பார்க்க வேறொருவரைத் தேவையில்லையே!—நீர் கந்தபுராணத்தில் காமசிருங்கார வர்ணனைக ளிருக்கின்றனவென யாரோ தெரிவிக்க அதை மாத்திரம் தேடிப் படித்துவிட்டு இப்படி உளைகின்றீர்!

கலியுகவரதராகிய சுப்பிரமண்ய சுவாமிக்கும் உமக்கும் நெடும் பகை யிருப்பது நம் பத்திரத்தால் யூகிக்கத்தக்கதே. எங்ஙனமெனில் வள்ளி திருமணம் என்னும் விஷயம் சில காலத்தின்முன் நம் பத்திரத்தில் வெளிவந்தபோது, சுப்பிரமணிய சுவாமியினது பெயர்களையும் சரிதங்களையுங் குறிக்குமிடத்து எவரு மருவருக்கத்தக்க வசனங்கள் காணப்பட்டன. நீர் இப்பொழுது சோதிட பரிபாலினியில் தொடங்கியுள்ள விஷயம் சைவசமயிகள் யாவரதும் மனதைப் புண்படுத்துமாதலின் வெட்க மென்றெண்ணி யஞ்சாது இனி நிறுத்திவிட்டு உய்தியடையும் வழியைத் தேடுவீராக.

இந்தியாவில் விசேடமென வாசிக்கும் இராமாயணம் முதலியவற்றை நிந்தித்தலாற் "குடியாக" நிர்ச்சாவாதிகளாற் போற்றப்படுகின்றது. ஆதலின், இத் தேசத்தில் விசேடமாகப் பாராயணஞ் செய்யுங் கந்த புராணத்தில் குற்றம் பார்த்தால் நம் பத்திரத்தையும் நிர்ச்சாவாதிகள் போற்றுவார்க ளென்பது உமதெண்ணம் போலும்!

இற்க, நீர் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளிற் குற்ற மாரோபிக்கத்தொடங்கி, அண்டகோசப் படலத்திற் சோதிட நிலைத மாறாகக் கூறியிருக்கின்றாரென்றும், அவருக்குச் சோதிடந் தெரியாதென்றும் கூறுகின்றீர். நம் மதிவாற்றலிருந்தபடியென்னே? கற்க வேண்டும் அல்லது கற்றோர்வாய்க் கேட்டுணர வேண்டும். இரண்டு மில்லாத உமக்கு அறிவு விருத்தியாவதெங்ஙன்? அவ்வண்டகோசப் படலத்திலுள்ளனவெல்லாம் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் தம் மெண்ணப்படி சொல்லவில்லை யென்பதையும், சுக்கிராசாரியர் சூரபன்மனுக் குரைத்தபடியே கூறினரென்பதையு மறிந்தடங்குவீராக. இங்ஙனங் கூறும் நீர் சூரபன்மனுக்குச் சுக்கிராசாரியர் கூறிய சில வஞ்சக மொழிகளையும் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் கூறியதென அவர்மேல் ஆரோபணஞ் செய்யப் பின்னிற்கமாட்டீர். எக்கிரியைகளிலும் வேதம் ஆகமம் எனனுமிரண்டையு முணர்ந்த பிராமணோத்தமர் முதலிய யாவராலும் பூசிக்கப்படும் மேன்மையமைந்த சுக்கிராசாரியர், சூரபன்மன் முதலியோரால் தேவராதியர்க்குத் தீமை நிகழவேண்டியது தேவசங்கற்பமாதலின், அத்தீமையை நிகழ்விப்பதற்கு வேண்டிய சூழ்ச்சிகளை யாராய்ந்து தமதுண்மையான மனக்கோட்பாட்டை விடுத்துப் பலவித பொய்மொழிகளையும் உரைத்திருப்பதை நீரறியவில்லைப் போலும். இக்குறிப்பை "நிதசான்மனத்தேசிகன்" என்பதனாலும், "நியதோரினைய மாற்றஞ் செப்பலும்" என்பதனாலும், பிறவாற்றானும் அச்சமயம சுக்கிராசாரியரின் மனமிருந்த நிலையை சுவாமிகள் குறித்திருக்கின்றனரன்றே? இதனால் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளை நீர் சோதிட வறிவற்றவரென்று கூறியது போலியாயிற்று.

எத்தனையோ விடங்களில் சுவாமிகள் பூமியின் பெயரை மண்டலம் எனக் குறித்திருப்பதை நீரேன் அறியவில்லை? பெருங்காப்பியத்திலிலக்கணத்தை நீரறிந்திருந்தால் கந்தபுராணத்திற் காமசிருங்கார வர்ணனை யிருக்கின்றதென்றும் சோதிடந் தெரியாத நூலாசிரியரென்றுங் கூறி இடர்ப்பட மாட்டீர்.

இவ்விஷயத்தைக் குறித்து விரிவான வியாசத்தை யெழுதி இப்பத்திரத்தின் விலை மதித்தற்கரிய விடத்தை வீணாக்குவது தகுதியன்று. நீரெடுத்துக்கொண்ட விஷயம் போலியென்பதை உலகினர் நன்கறிந்துகொண்டனர். இற்க,

பலவருடங்களாக நல் விஷயங்களைப் புகட்டி இந்துக்களை மேனிலையில் வைத்த இந்துசாதன பத்திரத்தையும்இச்சைவசமயத்தில்பத்திராசிரியரா யிருப்பவரின் மேன்மையையும் நீர் நன்கறிந்திருந்தும், நுந்தாபிப்பிராயத்தைத் தஞ்சமயாபிமான முதிர்ச்சியினால் மறுத்தெழுதியதற்காக இகழ்கின்றீர். அன்றியும் இந்துசாதனப் பத்திராசிரியருக்கு மாறாக எழுதும் விஷயத்தில் "நீட்டுத்தடியிற் கூர் பார்க்கின்றீர்" என உம்மை எவரும் அவமதிக்கின்றார்களே. நுஞ் செயல் பஞ்சமாபாதகத்தில் ஒன்றல்லவா.

அதுவமன்றி பத்திரம் எப்போது வரும் எப்போது வரும் என்று எதிர்பார்த்து எவருமெடுத்து வாசித்து! மகிழ்வடையு மியல்பமைந்த "உலகம் பலவித" த்திற பொருளை கொணடு முன சிலகாலம் குறிப்பாகவும், இப்பொழுது வெளிப்படையாகவு மிகழ்கின்றீர். உலகம் பலவித மென்பதற்கு நீரா இலக்கியமாயிருந்துகொண்டு அதை நீர் இகழுவதினால் உலகம் ஒருவித மெனபதை நில நிறுதப் பார்க்கின்றீர். இஃதென்ன விந்தை!

"உலகத்தோடொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலாதார்"

என்றதனால் கற்றவர்களைக் குறித்து உலகத்தோடொட்டி யொழுகல் கல்லாமையால் அறிவின்மையைக் குறிப்பிட்டு தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனரும் வேறுபடுத்தினர் ஆதலின் உலகம் பலவிதமன்றோ! இவ்வுண்மைகளையுணர்ந்து இனியாவது பாதகஞ்செய்வதை நிறுத்தி உய்தி யடைவீராக.

இங்ஙனம்,
தங்களன்பனும் நண்பனுமான
R. கணேச பண்டிதர்
அற்றன்.

எங்கே போகலாம்?

நமது யாழ்ப்பாணவாசிகள் அரிசிகுத்தும் ஆலைகளினுதவியால் அநேக சுகயங்களை அநுபவிக்கின்றனர் எங்கள் கிராமவாசிகள் இந்தச் சுகயங்களைத் தாராளமாய் அநுபவித்தற்கு எங்கே போகலாம்.

சுன்னாகத்து அன்னபூரணி அரிசி ஆலைக்கே போகலாம்? அது தன் வாயிலாகத் தானியங்களைக் குத்தியும் தவிடாக்கியுந் தருகின்றது.

இன்னும் அது அரிசி, நெல், தவிடு விற்பனையுஞ் செய்கின்றது. ஆதலால் நாமும் சுன்னாகம் அன்னபூரணி அரிசி ஆலைக்கே போய்ப் பூரணத்தைப் பெறுவோமாக.

(Q. 14) தி.

ஜவாஹிருல் முபாரா லேகியம்.

ஒரேவேளையில் பரீட்சை பார்க்கலாம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒரே வேளை வேண்டிய சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமுந்திடமும் உண்டாகும்.

பரீட்சைக்குப்பலனுக்கும் உத்தரவாதமுள்ள சத்திய ஔஷதம். சொப்பன ஸ்கலிதம், துரித ஸ்கலிதம், பற்பல வாய்வு ரோகங்கள், இடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல்பசிமந்தம் தேக காங்கையில் நேரும்போகும் பலஹீனங்கள் முதலிய யாவற்றையும குணப்படுத்தும். பத்தியமில்லை. உபயோக விபரம் மருந்துடன் வரும். வி பி வேறு.

20நாள் 40வேளை டப்பி 1க்கு விலை ரூ 4.00
10நாள் 20வேளை டப்பி 1க்கு விலை ரூ 2-20

மேலே சொல்லப்பட்ட வியாதிகளையும் இதில் சொல்லப்படாத வியாதிகளையும கண்டிக்கும். அசல் சத்தியவாக்குள்ள (சிட்டுக்குருவி) மாத்திரைகள் 16கொண்ட டப்பி1க்கு விலை ரூபா 5-00. கைகண்ட பலன்.

வி. பி. வேறு.
K V. Vappadurai & Co
Portonovo
S. I.
(M. 78. 3—4-8-30)

தங்க மெடலகள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்
திறமான குடை அடையாளமுள்ள

கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு இந்த ஓடுகளை வெகு பணிக்கமாய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, கெருபுக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது. இதுவரை 10 தங்க மெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையாராக்கிப் புகழ்பெற்றது. மிக இலேசானது. மலிவானது. ஒவ்வொரு ஓட்டிலும் குடை அடையாளம் விளங்கும். காங்கேசன்துறையிலே நவமாகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாள முன்னர் 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணாடிஓடுகளுமுண்டு.

ஜே. செருபிம் அன்ட் பிறதர்.
ஏசண்டர், பெரியதெரு,யாழ்ப்பாணம்.
(Y. 70. 11-8 30.)

ஒவ்ஸின்! ஒவ்ஸின்!! ஒவ்ஸின்!!!

மிகவிலைகுறைந்தது! நீடித்து உழைக்கக்கூடியது.



மோட்டர்ரதங்கள் விற்பனை.

ஒஸ்ரின், டொட்ஜ், உசொற்ரே, முதலிய இரதங்கள்; வார்கோ, டொட்ஜ், மொறிஸ் முதலிய பஸ்களும், லொறிகளும்;

டக்லாஸ், ஏ. ஜே. எஸ். சானேலீயா மோட்டர்சைக்கிள்களும், சாதாரண சைக்கிள்களும் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பாவித்த மோட்டர்ரதங்கள் மாற்றிக் கொடுக்கப்படும் எவ்வித மோட்டார்சாமான்களும் கிடைக்கும்.

கந்தோர்கள்,
(1) இரத்தினபுரி
(2) 11 அவொன்டேல்தெரு, கொழும்பு.
(3) கொட்டடி, யாழ்ப்பாணம்

K. S. இராஜலிங்கம்,
மெசர்ஸ் வாக்கர் சன்ஸ் கம்பெனியின் ஏசண்ட்,
இரத்தினபுரி.

(Y. 1. 14-7-30—13-7-31.)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்-மேற்கு கொட்டடி மா கு. தெண்டாயுதபாணி என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின்விபரம்:—

1928-ம் ஆ நவம்பர்மீ

இ உ. ரூ. ச பெயரும் ஊரும் நகையின்விபரம்

e 4189 17 250 க ஆறுமுகம் கடையடி முறிச்சக்குத்திக்கொடி 1

1929-ம் ஆ மார்ச்சுமீ

e 9535 27 11 வ கணபதிப்பிள்ளை நீராவியடி கல்தோடு 2

ஏப்பிரல்மீ

e10311 16 40 மு குமாரசாமி சிவியாதெரு கைச்சங்கிலி 1, மோதிரம் 1
10335 16 50 03 சே முகம்மது மீறான்முகைதீன் சோனகதெரு பெரியதெரு பொன்க
10379 17 10 வே சின்னத்தம்பி கொட்டடி மோதிரம் 1 [டையம்2
10425 18 30 ப முகம்மது அப்துல்காதர் சோனகதெரு காதப்பூ 2, அலுக்குத்து 4, இரண்டுபட்டு மணிக்கோர்வை 1
10142 19 80 த பொன்னையா கொக்குவில் அச்சுக்காப்பு 2
10514 21 10 சி கணபதிப்பிள்ளை கந்தர்மடம் கொண்டப்பூ 1
105[illegible]4 22 8 கா கபிபுமுகம்மது தைக்காரோட்டு சோனகதெரு மோதிரம் 1
10594 22 6 இ மாணிக்கம் புங்குடுதீவு மோதிரம் 1

மேமீ

10986 1 20 மு நாகப்பா கொட்டடி மோதிரம் 1
11120 5 150 செ நாகலிங்கம் கரம்பன் முறிச்சக்குத்திக் கொடி 1
11137 5 13 93 மு கந்தையா தட்டாதெரு கவுத்தோர் 1
11168 6 14 03 S. சின்னையா அத்தியடி கல்தோடு 2
11442 12 12 பி பிலேந்திரன் நாவாந்துறை கல்தோடு 2
11510 13 12 மு அப்துல்றகுமான் தைக்காரோட்டு சோனகதெரு கவுத்தோர் 1, பின்
11688 18 10 03 சண்முகம் செல்லர் கொட்டடி கல்தோடு 2 [கோர்க்கி1
11798 20 90 மு சுப்பிரமணியம் சரவணை சங்கிலிக்கொடி 1
11836 21 8 மீ முகம்மதசரிபு தைக்காரோட்டு சோனகதெரு மோதிரம் 1
11871 22 30 மீ காதிறசாய்பு வில்லூண்டி பொன் மோதிரம் 11
11893 23 13 03 க கந்தர் வேலணை மோதிரம் 1
12103 28 25 சி ஆறுமுகம் பூநகரி கம்பிப்பூரானட்டியல் 1. சிமிக்கிவாளி 2
12117 28 25 93 வே சப்பன் கடையடி கம்பிப்பூரானட்டியல் 1
12227 30 45 சி நீக்கிலாப்பிள்ளை நாவாந்துறை முறிச்சக்குத்தி அட்டியல் 1

ஜூன்மீ

e12352 2 70 க கமலியேல் மண்கும்பான் கெட்டிக்காப்பு 2
12384 2 10 ஐ மூதலி கொட்டடி மோதிரம் 1
12393 3 11 கா சின்னச்சி கொட்டடி குப்பிக்கடுக்கன் 3, காதப்பூ 2
12409 3 130 03 R இராசதுரை நல்லூர் அச்சரக்கூடு 3 பவுன்1, லோக்கெயின் 1, கெட்
12410 3 12 அ வாரித்தம்பி ஆனைப்பந்தியடி புரோச1, மோதிரம் 1 [டிக்கொலிசு2
12513 6 7 செ சாகுல்கமீது சிவலைப்பள்ளிச்சோனகதெரு இடிப்பாசக்காய் மணிக்கோர்வை 1
12541 7 120 தா நவரத்தினம் தட்டாதெரு தென்னம்பூச் சங்கிலிக்கொடி 1
12570 8 15 மு சின்னத்தம்பி ஆனைக்கோட்டை சிறுகாப்பு 2
e12577 8 209 06 வே தருமலிங்கம் சண்டிக்குழி மூப்படன் பூக்காப்பு 2, கல்லு மோதிரம் 1, பெட்டிமோதிரம் 1, பீலிக்காப்பு 2
12626 9 60 03 இளையதம்பி சின்னன் கொட்டடி நல்லசிங்க புக்கல் தோடு 2
12693 10 8 த முகம்மதமீருசாய்பு சோனகதெரு சிறுகாப்பு 2
12726 11 35 உ சாகுல்கமீது சோனகதெரு காமலடி கயிற்றுத்தாலி 1
12750 12 25 03 கா தம்பிப்பிள்ளை கொட்டடி கம்பிப்பூரானட்டியல் 1
12798 13 150 03 மு சின்னத்தம்பி சோனகதெரு கொப்பு 2 பொன் சவடி 1, குச்சி 3, பட்டணக்காப்பு 2, சிக்கறை கோர்வை 1, சிறுகாப்பு 2, மணிக்கோர்வை 1, பொலகொடி 1
12849 14 80 சு க முகம்மதசமுசுதீன் சோனகதெரு அலுக்குத்து30, சவடி1, சிறு
12898 16 150 03 சி கந்தப்பிள்ளை மானிப்பாய் முறிச்சக்குத்திக்கொடி 1 [காப்பு2
12958 17 50 03 க சங்கரப்பிள்ளை நல்லூர் கெட்டிக்காப்பு 2
13019 18 10 வி சீனி அத்தியடி சிறுகாப்பு 2
13054 19 15 03 ம தியாகராசா செம்மாதெரு கைச்சங்கிலி 1
13156 22 22 03 பெ நல்லதம்பி பறங்கித்தெரு குண்டுச்சங்கிலி 1
13177 22 80 03 கா வேலாயுதம் கடையடி கெட்டிக்காப்பு 2
13180 22 120 03 வே தளையசிங்கம் வட்டுக்கோட்டை மேற்கு பதக்கத்துடன் குசலைச்சிகப்புக்கல் அட்டியல் 1
13212 23 20 மு அப்துல்காதர் சோனகதெரு பழைய பதக்கத்துடன் மு அட்டியல் 1
13302 25 10 மு முகம்மதுமூகைதீன் சோனகதெரு கல்தோடு 1, பின்கோர்க்கிபாதி1, கல்முகப்பு 2
13311 25 610 03 மு குமாரசூரியர் தொல்புரம் வயிரக்கல் தோடு சோடி 1
13319 25 35 03 சே கந்தையா அல்லைப்பிட்டி கொண்டைப்பூ3, கவுத்தோர் 1, பதக்கம் 1, சிமிக்கிவாளி 4 குப்பிக்கடுக்கன் 4
13322 25 12 மு முகம்மதசரிபு சோனகதெரு கைச்சங்கிலி 1, மோதிரம் 1

விற்பனவு:—பிரமோதூதஹூ ஆவணிமீ 10-ம் திகதிக்குச்சரியான (1930-ம் ஆ ஆகஸ்டுமீ 26உ) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் லிபட்டணைபுறநேகலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
ஏலத்தின்மேஸ்தர்.

(Mis 14 24&28)

இந்தியாவின் மிகப் பெரிய

ஒறியன்றல்

சீவவீமாக்கம்பனியின்

19-ம் மூன்று வருட லாபப்பங்கீடு

1930-ம் ஆ டிசம்பர்மீ 31-ந் திகதியில்
காணப்படும் லாபத்தின்படி நடத்தப்படும்.

இதற்குமுந்திய மூன்று கணக்குத்திட்டங்களில் கண்ட லாப ஏறுபடி.

1921-ம் ஆ 21½ லட்சம், 1924-ம் ஆ 53 1/3 லட்சம்,
1927-ம் ஆ 78 லட்சம் ரூபாக்களாகும்.

வீமாக்காரருக்குக் கொடுப்பதாக நியமிக்கப்பட்ட இனுந்தொகைகள்.

1921-ம் ஆ வருஷமொன்றுக்கு ரூபா 1000-க்கு ரூபா 10;
1924-ம் ஆ ,, ,, 1000-க்கு ,, 22½;
1927-ம் ஆ ,, ,, 1000-க்கு ,, 25.

இக்தவருடத்தில் லாபத்துடன் வீமாத் தீருகிறவர்கள்
1930-ம் ஆ டிசம்பர்மீ 31உ வரைக்கும் கட்டிவந்தால்
இம்முறை லாபத்திற் பங்குபெறுவார்கள்.

இப்பொழுதே வீமாவிற் சேர்ந்தால் உமக்கு லாபமுண்டு.

பிரதிநிதிகள் எங்குமுண்டு.

தலைமை வேலைத்தலம்:—ஒறியன்றல் கட்டடங்கள், பம்பாய்.

விபரங்களுக்குக் கீழ்க்குறிக்கப்பட்ட ஒருவருக்கு எழுதியறிக.

A. C. லோட்டன், கிளைக்காரியதரிசி, 52 டேயிலித்தெரு, கொழும்பு.

J. P. கனகசபை, பிரதானபிரதிநிதி, கண்டி.

பிரதிநிதிகள்.
வில்லியம் மாதர் & சன்ஸ், யாழ்ப்பாணம்.
T. சுப்பிரமணியம், கந்தரோடை, சுன்னுகம்.
M. குமாரசூரியர், சுளிபுரம்.
S. இரத்தினசிங்கம், மட்டக்களப்பு.

(Y. 78. 30-6-30—29-7-31. வி & க தி)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு க. செ த செ செல்லையபிள்ளை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பிமேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில்விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்

1929ஹூ ஏப்பிரல்மீ

இல திரூபா ஊரும் பெயரும் நகைவிபரம்

4440 2 10 சுதுமலை அந்தோனிப்பிள்ளை தம்பிப்பிள்ளை கல்வைத்த கவுத்தோர் 1
4444 ,, 50 பெருமாள் கோவிலடி சீனிவாசகம் செட்டி இராமானுசம் செட்டி சாதா கொலுசுக் காப்புச் சோடி 1
4466 5 40 வேலணை ஆறுமுகம் எரம்பு டிம்பியுடன் கம்பிப்பூரானட்டியல் 1
45[illegible]0 9 70 நல்லூர் இளையவி சண்முகம் முளுப்பவுண் 1 கோர்த்த குண்டுச்சங்கிலி 1
4538 11 60 கொக்குவில் நாகநாதர் பொன்னம்பலம் கல்வைத்த சாதா கொலுசுக்காப்புச் சோடி 1
539 ., 45 சண்டிலிப்பாய் கார்த்திகேசு வேலுப்பிள்ளை சாதாக் கம்பிப்பூரானட்டியல் 1
45 9 18 10 ஆரியகுளம் ஆறுமுகம் சுந்தரர் கல்வைத்த கவுத்தோர் 1
4625 21 45 சோனகதெரு முகம்மது மெய்தீன் அசனார் சாதா தாலிக்கொடி 1
4659 25 32 அளவெட்டி கணபதிப்பிள்ளை குமாரவேலுப்பிள்ளை சிறு பிள்ளைக்காப்புச் சோடி 1 சாதா சரட்டு அட்டியல் 1
4708 29 125 சிவன் வடக்குவீதி விஞசித்தம்பி வேலுப்பிள்ளை டிம்பி பதக்கத்துடன் கெட்டிப் பூரானட்டியல் 1 மேற் கல்வைத்த கவுத்தோர் 1 கல்வைத்த புரோட்ச 1

1929ஹூ மேமீ

4950 19 45 நீராவியடி மாணிக்கம் பொன்னையா சாதா பீலிக்காப்புச் சோடி 1
4984 21 118 சோனகதெரு செய்யது முகம்மது சேப்துல்காதர் டிம்பி பதக்கத்துடன் கம்பிப்பூரானட்டியல்1 தாயித்து1 அஞ்சட்டு மணிக்கோர்வை 1
4992 ,, 40 தணவி வேதக்குட்டி இராசநாயகம் சாதா சங்கிலி 1
4994 ,, 50 மீசாலை வேலுப்பிள்ளை ஆறுமுகம் கல்வைத்த அறுப்புக்காப்பு சோடி 1
5020 23 136 சோனகதெரு செய்யது முகம்மது சேகப்துல்காதர் கொளுக்கி இல்லாத சாதா சங்கிலி 1 சாதா கைச்சங்கிலி சோடி 1 வாட்ஸ் சங்கிலி 1 தவை 3 புத்தான் 1 பின் 1 நீலக்கல் மோதிரம் 1 சிகப்புக்கல் மோதிரம் 1
5041 25 38 மேற்படியூர் மேற்படியார் அவல்மாலை 1 பொத்தான் 2
5049 ,, 40 தட்டாதெரு அருணாசலம் சபாபதி சாதா கெட்டிக்காப்பு சோடி 1
5050 ,, 60 காங்கேசன்துறை வயிரவிப்பிள்ளை சின்னத்துரை கல்வைத்த பீலிக்காப்புசோடி1

1929ஹூ ஜூன்மீ

5127 1 95 நீராவியடி சின்னையா சரவணமுத்து கல்வைத்த கெட்டிக்காப்பு சோடி 1
5 63 5 40 ஆனைக்கோட்டை சரவணமுத்து செல்லையா சாதாக் கம்பிப்பூரானட்டியல் 1
5221 9 500 கோப்பாய் சின்னத்தம்பி செல்லையா கால் டலர் 2 கோர்த்த சந்திரகாரசங்கிலி1 கல்வைத்த கெட்டிக் கொலுசுக்காப்பு சோடி 1 கல்வைத்த டைமன் காப்புச் சோடி 1 டிம்பி பதக்கத்துடன் கெட்டிப்பூரானட்டியல் 1
5269 12 20 மானிப்பாய் சாமிநாதர் முத்தையா மனுக்கன் சிகப்பு காதோலை சோடி 1 வெள்ளியில் பொன் போட்ட கொண்டப்பூ 1 சிமிக்கிவாளி சோடி 1
5311 16 25 மண்டதீவு சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை வயிரச்சன்னம் 4 வைத்த தொங்கட்டான் 1
5337 18 55 கைதடி இராமலிங்கம் சேனாதிராசா பட்டணக்காப்புச் சோடி 1
5354 19 45 திருநெல்வேலி கணபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை சாதா பீலிக்காப்புச் சோடி 1
5369 20 50 கைதடி இராமலிங்கம் கனகசபை சாதா முருச்சக்குத்தி அட்டியல் 1
5379 21 55 காரைதீவு சின்னத்தம்பி ஆறுமுகம் பட்டணக்காப்புச் சோடி 1
5392 22 55 அனலைதீவு நாகநாதர் பொன்னம்பலம் பட்டணக்காப்புச்சோடி 1
5403 24 92 கொக்குவில் நாகமணி சுந்தரம் டிம்பி பதக்கத்துடன் கெட்டிப்பூரானட்டியல் 1
5469 27 50 சோனகதெரு செய்யது முகம்மது சேப்துல்காதர் சாதா டைமன் அட்டியல் ஒன்று இமிடேசன் கல் காதோலை சோடி 1
5474 28 60 வண்கிழக்கு முருகர் பெண் மாரிமுத்து பட்டணக்காப்புச் சோடி 1

விற்பனவு. பிரமோதூதஹூ ஆடிமீ 25ம் திகதிக்குச் சரியான 9-8-30 சனிக்கிழமை காலை 9மணி அளவில் லிபட்டணைபுறநேகலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

(Mis 13. 21&24)

சி. ஐயம்பிள்ளை உடையார்
ஏலத்தின்மேஸ்தர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambhandan for and on behalf of the Proprietors, the Jaffna Siva Paripalana Sabai, at their Press the Saiva Prakasa Press, Vannarponnai.